DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:S.C.No.54/2025

Prosecution Witness P.W.4

Name : **திருமதி.பஞ்சம்மாள்**

Caste:

Father's Name :**திரு.**

Calling :

Village:

Religion :

Taluk :

Age:

எதிரிகள் ஆஜர்

**நாள்: 03.02.2026.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. எனது வீடானது மாணிக்காபுரம் நடுத்தெருவில் அமைந்துள்ளது. நான் அங்கு குடியிருந்து வருகிறேன். இறந்து போன சென்றாயன் எனது ஒரே மகன். சாட்சி சொன்ன ஜமுனாராணி எனது மகள். எனது மகளுக்கு கண்டமனூரில் திருமணம் செய்து கொடுத்தேன், அதன்பிறகு தற்போது அவர் அவிநாசியில் குடியிருந்து கொண்டு வேலை செய்து வருகிறார்.

2. நான் கூலி வேலைக்கு செல்வேன். எனது மகன் வெளியூருக்கு சென்று பெயிண்டிங் வேலை செய்து வருவார். 15- 20 நாட்களுக்கு ஒரு முறை உள்ளூருக்கு வருவார். எங்கு வேலை செய்கிறாரோ அங்கேயே தங்கிக் கொள்வார். அதல்லாமல் மைக் செட் வேலையும் செய்வார். திருவிழா காலங்களில் அந்த வேலையும் செய்வார். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள 1ம் எதிரியின் பெயர் ராஜ பிரபு. 2-ம் எதிரி பூங்கொடி எனது மகன் சென்றாயனின் மனைவி எனது மருமகள், 3-வது எதிரியான முருகன் பூங்கொடியின் தந்தை. எதிரிகள் 4, 5, 6 உப்புக்கோட்டையை சேர்ந்தவர்கள்.

3. 1ம் எதிரி ராஜபிரபு பூங்கொடியின் தாய் மாமனின் பேரன் என்ற வகையில் சொந்தம். நான் 2-ம் எதிரி பூங்கொடி மற்றும் எனது மகன்

சென்ராயன் ஆகியோர்கள் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தோம். எனது மகன் சென்ராயனுக்கு இரண்டு குழந்தைகள் ரீனா ஸ்ரீ மற்றும் மாயஷர்மா அவர்களுக்கு முறையே 13 மற்றும் 6 வயது. அவர்களும் எங்களுடன் தான் குடியிருந்து வந்தார்கள். எனது மகன் இறப்பதற்கு ஒரு வருடங்களுக்கு முன்பிருந்தே முதல் எதிரி ராஜபிரபு 2ம் எதிரியாகிய எனது மருமகள் பூங்கொடியை பார்ப்பதற்கு எங்கள் வீட்டிற்கு எனது மகன் இல்லாத சமயங்களில் வருவதை நான் பலமுறை பார்த்துள்ளேன், நான் ராஜபிரபுவை கண்டித்து இருக்கிறேன். சில நேரங்களில் ஒரு வாரம், பத்து நாட்கள் கூட எனது மகன் இல்லாத சமயங்களில் ராஜபிரபு எங்கள் வீட்டில் தங்கி இருக்கிறார். இருவரும் செல்போனில் காதில் ஒயர் போட்டுக் கொண்டு பேசுவதை நான் பார்த்திருக்கிறேன். கதவை அடைத்துக் கொண்டே எனது மருமகள் அவருடன் செல்போனில் பேசுவார்.

4. நான் ராஜபிரபுவை இது பற்றி கண்டித்தபோது அவ்வாறு வருவேன் என்றும், கண்டித்தால் உன்னையும், உனது மகனையும், கொன்று விடுவேன் என்று என்னை நிறைய முறை என்னை மிரட்டி உள்ளார். சம்பவ சமயத்திற்கு முன்பு அவர் உள்ளூரில் தான் இருந்தார். அப்போது எங்கள் ஊருக்கு வருவார் இருசக்கர வாகனத்தில் வேகமாக ஹார்ன் அடித்துக் கொண்டு வருவார். என்னைப் பார்த்தவுடன் உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டி உள்ளார். வெளியில் அவர் வேலைக்கு சென்றாலும் விடுமுறை நாட்களில் வரும்போது எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு.

5. என்னை பார்க்கும் போதெல்லாம் ராஜபிரபு மிரட்டுவார். எனது மகனுக்கும் இந்த விபரம் தெரிந்து அவர் வீட்டில் பிரச்சனை செய்வார். இது சம்பந்தமாக நான் எனது மகனை சமாதானம் செய்து குழந்தைகளுக்காக பொறுத்துக் கொண்டே இரு என நான் சொல்லி வந்தேன். எனது மகன் எதிரிகள் 1 மற்றும் 2 ஒன்றாக பேசிப் பழகி வீட்டுக்கு வரும் விபரங்களை நேரில் பார்த்து பிரச்சனை செய்தார். போன வருடம் எனது மகன் வெளியில் இருந்து

வீட்டுக்கு வந்து தனது மகன், மகள் மற்றும் மனைவியை பார்த்து வருவதாக சொல்லி தனது மனைவி இருக்கும் கலெக்டர் தோப்பிற்கு போய் பார்த்தவர் திரும்பி வரவில்லை.எனது மகன் அவர்களைப் பார்த்துவிட்டு வந்து வீட்டிலிருந்தார்.

6. எனது மகள் எனது மகனுக்கு போன் போட்ட பொழுது எனது மகன் போனை எடுக்கவில்லை எனது மருமகளான பூங்கொடியிடம் எனது மகள் கேட்டபோது உனது தம்பி இங்கு இல்லை 5-6 பேர்களை வைத்து கொன்று போட்டு விட்டோம். போய் தேடிக் கொள் என்று எனது மகளிடம், பூங்கொடி சொல்லி உள்ளார். இது சம்பந்தமாக எனது மகள் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். நானும், எனது மகளும் அனாதை பிணமாக ஒரு பிணம் அரசு மருத்துவமனையில் இருப்பதாக சென்று அடையாளம் காட்டுவதற்காக போனோம். அந்தப் பிரேதம் எனது மகனுடையது என்பதை பார்த்து அடையாளம் தெரிந்து கொண்டோம். பிரேத பரிசோதனை முடித்து எனது மகனின் பிரேதம் எங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

7. எனது மகள் எடுத்துக் கொடுத்த வேஷ்டி மற்றும் சட்டை அணிந்து இருந்தார் சட்டை கிழிக்கப்பட்டு வெறும் பனியனுடன் அவரது பிரேதம் இருந்ததை பார்த்து நாங்கள் அடையாளம் சொன்னோம். எனது மகனின் செருப்பை எனது மகள் பார்த்துள்ளார், நான் பார்க்கவில்லை. எனது மகனின் துணிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் அந்த துணிகள் சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.என்னிடம் காண்பிக்கக் கூடிய புகைப்படத்தில் இருப்பது தான் எனது மகனின் பிரேதம்.போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனது மகனும், மருமகளும் காதல் திருமணம் தான் செய்து கொண்டார்கள். கடந்த 10 ஆண்டுகளாக எனது மகனுக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல, இந்த பிரச்சனைக்கு பிறகு தான் எனது மகன் மது

அருந்துவார். அதற்கு முன்பு அதிகமாக குடிக்க மாட்டார். 10 வருடங்களாக எனது மகன் மது அருந்திவிட்டு வந்து தனது மனைவியை அடிக்கும் சம்பவம் நடந்து வந்தது என்றால் சரியல்ல. இந்த பிரச்சனைக்கு பிறகு தான் எனது மகன் பிரச்சனை செய்தார். கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்கள் தொடர்பில் இருந்து வருகிறார்கள். தற்பொழுது முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் இருவரும் கேரளாவில் ஒன்றாக வசித்து வருகிறார்கள் என நான் கேள்விப்பட்டேன்.

2. சம்பவத்திற்கு முன்பு இரண்டு ஆண்டுகளாக அவர்களுக்கிடையே தொடர்பில் இருந்து வருகிறார்கள். பார்த்தவர்கள் சொல்லி அவர்கள் கேரளாவில் தங்கி வந்த விபரம் தெரிந்து கொண்டேன், நான் நேரடியாக பார்க்கவில்லை. எனது வீட்டை சுத்தி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். வீட்டை சுற்றி இருப்பவர்கள் ராஜபிரபு வருவதையும், போவதையும் பார்த்திருப்பார்கள் என்றால் அவர்கள் எல்லோரும் கூலி வேலைக்கு சென்று விடுவார்கள், ஓரிரு நபர்கள் பார்த்திருக்கலாம். நேரடியாக அவர்கள் தொடர்பில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கதவை சாத்திக்கொண்டு அவர்கள் இருக்கும் விவரம் எனக்கு தெரியும். போனில் பேசுவது யாருடன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

3. நான் நம்பரை பார்த்திருக்கிறேன், நான் படித்திருக்கிறேன். அந்த போன் நம்பர் எனக்கு தற்போது ஞாபகமில்லை. எனது மருமகளின் நம்பர் எனக்கு தெரியுமா என்றால் மனப்பாடமாக தெரியாது, செல்லில் உள்ளது. ஒரே வீட்டில் தான் நாங்கள் குடியிருந்தோம் என்றால் சரிதான். எங்கள் வீட்டின் முன் ஒரு கடை உள்ளது. ஒரு சமையல் கட்டு, ஒரு படுக்கை அறை உள்ளது. படுக்கை அறையில் 2–ம் எதிரி தூங்குவார் ராஜபிரபு என்னை மிரட்டியது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் தெரிவித்துள்ளேனா அல்லது பொதுமக்களிடம் பஞ்சாயத்து ஏதேனும் செய்தேனா என்றால் அவ்வாறு நான் எதுவும் செய்யவில்லை.

4. ஜமுனா ராணி எனது மகளிடமும் நான் சொல்லி உள்ளேனா என்றால் நான் என் மகளிடம் சொல்லி உள்ளேன். ராஜ பிரபு எங்கள் வீட்டிற்கு வரும்போது குழந்தைகள் வீட்டில் தான் இருப்பார்கள் என்றால் சரிதான். நானும் குழந்தைகளும் ஒன்றாக தூங்குவோம். 2ம் எதிரி 1ம் எதிரி ராஜபிரபுவுடன் இருப்பார். நான் கூறுவது போல் ராஜபிரபு வீட்டிற்கு வந்ததில்லை என்றும், வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் இது சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் தெரிவித்து இருந்தாரா என்றால் குழந்தைகள் வாழ்வை கருதி எனது மகன் புகார் எதுவும் தெரியவில்லை. எனது மகன் மது அருந்திவிட்டு எனது மருமகளை எனது மகன் அடித்ததாக சின்னமனூர் காவல் நிலையத்தில் நானும், எனது மருமகளும் சேர்ந்து புகார் தெரிவித்த எனது மகனை அழைத்து சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல, என்னை எனது மகன் அடித்ததாக தான் புகார் தெரிவித்தேன்.

5. இந்த சம்பவம் தொடர்பாக பார்த்துவிட்டு ஏன் என்னிடம் தகவல் சொல்லவில்லை என்னிடம் சொல்லக்கூடாதா என்று தான் எனது மகன் என்னை அடித்தார் அது சம்பந்தமாக தான் நான் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தேன். அது நடந்தது 2021 ஆம் ஆண்டா என்றால் 2021 அல்லது 2022 ஆம் ஆண்டு இருக்கும். இது சம்பந்தமாக பலமுறை 2–ம் எதிரி பூங்கொடி எனது மகனுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும், சின்னமனூர் காவல் நிலையத்திலும், வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்து இருந்தார் என்றால் இந்த பிரச்சனை காரணமாக தான் அடிக்கடி சண்டை வரும் அதனால் தான் பிரச்சனை ஏற்படும். வழக்குக்காக நான் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், 12 ஆண்டுகளாக இதுதான் வேலை என்றால் சரியல்ல.

6. எனது மகன் ரேடியோ செட்டுகளை விற்றுவிட்டு குடித்துவிட்டார் என்றால் சரியல்ல அந்த வீடானது 3ம் எதிரி தனது மகளுக்கு ஒரு லட்ச ரூபாய்

பணம் கொடுத்து அவரது மகள் பெயருக்கு வாங்கி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஒரு லட்சம் கொடுத்தேன் 2ம் எதிரியின் தகப்பனார் ரூ.8000/- கொடுத்தார். வழக்குக்காக நாங்கள் பொய்யாக குறிப்பிடுகிறோம் என்றால் சரியல்ல. எனது மகன் பெயருக்கு எழுதி வைக்காமல் ஏன் மருமகள் பெயருக்கு எழுதி வைத்தோம் என்றால் எனது மகனுக்கும், அவரது சித்தப்பாவுக்கும் பிரச்சினை ஏற்பட்டதால் தனது பெயருக்கு எழுத வேண்டாம் என சொல்லி தனது மனைவியான இரண்டாம் எதிரி பெயருக்கு அந்த சொத்தை எழுதப்பட்டது.

7. எனது மகன் மது குடித்துவிட்டு எல்லோரிடமும் சண்டை போட்டு பிரச்சினையாகி காவல் நிலையம் சென்று இது சம்பந்தமாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனைவி பிரச்சினைக்கு மட்டுமே அவர் காவல் நிலையத்திற்கு சென்று உள்ளார். வீட்டில் உள்ள நகைகள் மற்றும் கொலுசுகளை விற்றும், என்னிடமும், இரண்டாம் எதிரியிடமிருந்தும் பணத்தை பிடுங்கி சென்று இறந்து போன எனது மகன் மது அருந்துவிட்டு பிரச்சினை செய்வார் என்றால் சரியல்ல.

8. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் எப்படி இருந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனது மகன் அதிக மது போதையில் காட்டிற்குள் சென்று கொம்புள்ள மாடுகள் கூர்மையான கொம்புகளுடன் முட்டி எனது மகன் இறந்து போனார் என்றால் சரியல்ல. அந்த 5-6 பேர் யார், யார் என்ற விவரம் எனது மகள் புகார் தெரிவித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் போலீசாரிடம் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்கள். எனது மகள் புகார் கொடுக்கும் போது நான் வேலைக்கு சென்று இருந்தேன். எனது மகன் ஜெயிலுக்குப் போய்விட்டு 4-5 நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்தார்.

9. 2-ம் எதிரியால் தான் எனது மகன் ஜெயிலுக்கு சென்றார். ஜெயபிரகாஷ் வீட்டில் இருந்த பொருட்களை எனது மகன் திருடியதால் தான் புகார் தரப்பட்டு

எனது மகன் ஜெயிலுக்கு சென்றார் என்றால் சரியல்ல.ஜெயப்பிரகாஷ் எனது மருமகள் தொடர்பாக குற்றச்சாட்டு சொன்னது தொடர்பாக எனது மகனிடடம் நான் சொல்ல வேண்டாம் என சொன்னது சம்பந்தமாக தான் ஜெயப்பிரகாஷ் உடன் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக எனது மகன் ஜெயிலுக்குச் சென்றார். எத்தனை முறை எனது மகன் 2வது எதிரியை அடித்தாலும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக 2-ம் எதிரி எங்கள் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்த நபர் தான் ஆள் வைத்து எனது மகனை கொன்றுள்ளார். எனது மகன் வெளியூருக்கு வேலைக்கு சென்ற சமயங்களில் தனது குழந்தைகளை அழைத்துக் கொண்டு 2-ம் எதிரி தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

10. எனது மகன் வேலையை விட்டு திரும்பி வந்த பிறகு அழைத்தாலும் வரவில்லை அதற்கு பிறகு தான் எனது மகனை ஆள் வைத்துக் கொண்டுள்ளார் பொதுமக்கள் வைத்து நாங்கள் இந்த பிரச்சினை தொடர்பாக பேசி உள்ளோமா என்றால் ஊரில் அனைவரும் மது அருந்துவார்கள் அதனால் யாரும் பேசுவதற்கு தகுதி படைத்தவர்கள் கிடையாது என்பதால் அவர்களிடம் இது பற்றி நாங்கள் முறையிடுவதில்லை. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும், நான் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே ராஜபிரபு எங்கள் வீட்டில் வந்து தங்கி இருந்தால் எனது மகன் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து இருப்பார் என்றால் சரியல்ல. எனது மகளும் நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் சரியல்ல. பூங்கொடியின் பொருட்கள் வீட்டில் இருந்தவற்றை நான் எனது மகளுக்கு சீராக கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல.

11. எனது மருமகள் கேட்கும்போது திருப்பி தருவதாக எனது மகள் சொல்லி உள்ளார். எனது பேத்திக்கு திருமணம் செய்யும்பொழுது அந்த பொருட்களை சீதனமாக தருவதாக எனது மகள் சொன்னதன் பேரில்தான் அந்த பொருட்களை அவருக்கு நான் கொடுத்தேன்.எனது மகனின் குழந்தைகள்

தற்போது யார் வீட்டில் இருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு போலீசார் சொல்லிக் கொடுத்து நான் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. தற்போது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை போலீசார் என்னை விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் இந்த விஷயங்களை போலீசாரிடம் சொல்ல முடியுமா என சாட்சி நீதிமன்றத்தில் குறிப்பிடுகிறார். பூங்கொடி பெயரிலுள்ள சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.03 18:37:22 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.